


சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பாரத ரத்னா எம். எஸ். சுவாமிநாதன் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருமதி பிரியம்பதா ஜெயக்குமார் எழுதிய "THE MAN WHO FED INDIA நூல் வெளியிட்டு விழாவில் நேற்று (2.11.2025) தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் கலந்துரையாடினார்.




கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி* பாக நிலை முகவர்கள்– BLA2 பாக சமூக வலைதள முகவர்கள்– BDA இளைஞரணி அமைப்பாளர்கள்– BYAஅவசர ஆலோசனை கூட்டம் 02.11.2025 நேற்று நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர் பாபு SIR செயல்பாடுகள் குறித்து பாகமுகவர்கள்,கழக நிர்வாகிகள் விழிப்புடன் பொதுமக்களை சந்தித்து எவ்வாறு களப்பணியாற்ற வேண்டும் என்பது குறித்து ஆலோசனை வழங்கினார். இதில் கொளத்தூர் தொகுதி பார்வையாளர் இரா.விடுதலை, கே.எஸ். ரவிச்சந்திரன், சரிதா மகேஷ் குமார் எம்.சி., பகுதி கழக செயலாளர்கள் ஐபிஎப்.வ.முரளிதரன், எ.நாகராசன், மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அரசின் திட்டங்களை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்!

## சிவகங்கை மாவட்டம் – நெற்புகப்பட்டி கிராமசபைக் கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை. நவ. 3 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி தி. சூரக்குடி ஊராட்சி கே நெற்புகபட்டியில் உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட திட்ட .இயக்குனர் மரு.அரவிந்த் வரவேற்று பேசினார் .

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது.

கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் பதவி ஏற்ற நாள் முதல் கிராம சபை கூட்டங்கள் வருடத்திற்கு ஆறு முறை நடைபெற வேண்டும் என்று உத்திரவிட்டுள்ளார். அதன்படி ஆறுமுறை கிராம சபை கூட்டங்கள் தற்போது நடைபெற்று வருகிறது.

முன்பு வருடத்தில் நான்கு முறை மட்டும் இக்கூட்டம் நடைபெற்றது. இத்தகைய கூட்டம் நடைபெறுவதன் மூலம் கிராம மக்களின் தேவைகளை அறிந்து அதை நிறைவேற்ற ஒரு வாய்ப்பாக அமையும் .இதற்காக கிராமசபை கூட்டங்கள் நடத்தப்படுகிறது. மேலும் அரசின் திட்டங்கள் என்னென்ன செயல்படுத்தப்படுகிறது என்பதையும் கிராம மக்களிடம் எடுத்துக் கூற நல்ல வாய்ப்பாக அமைகிறது.

இதன் மூலம் கிராம மக்கள் அரசு செயல்படுத்தும்



திட்டங்களை நன்கு தெரிந்து கொள்ள முடியும் .அரசு திட்டங்கள் கிராமங்களில் செயல்படுவதை கிராம மக்கள் கண்காணிக்க வேண்டும். அப்பொழுதுதான் அரசு திட்டங்கள் முழுஅளவில் நிறைவேற முடியும் .

மகாத்மா காந்தி அடிகள் கிராமங்கள் வளர்ச்சி பெற வேண்டும். இதன்மூலம் கிராம சுயராஜ்யம் ஏற்படும் என்று கூறினார். அவர் கூறியதை ஏற்று தமிழக முதல்வர் அவர்கள் கிராம சபை கூட்டங்களை நடத்தி வருகிறார். நகரங்களுக்கு இணையாக கிராமங்களில் அடிப்படை வசதிகள் நிறைவேற்றவேண்டும் என்ற எண்ணத்தில் கிராமத்திற்கு அடிப்படை வசதிகளான மருத்துவம் ,கல்வி , சுகாதாரம் மற்றும் பல்வேறு திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றது. நீங்கள் செலுத்தும் வரி பணம் அரசின் திட்டங்களாக உங்களுக்கே திருப்பி அளிக்கப்படுகிறது . கிராமங்கள் முழு அளவில் முன்னேற வேண்டும் என்று அக்கறை கொண்டு உள்ளார் .அதே போல் அமைச்சர்கள் கிராம நலனை மையமாக வைத்து செயல்பட வேண்டும் என்று எங்களுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

### மக்கள் தேவை அறிந்து செயல்படும் முதல்வர்!

கிராமப்புறங்களில் வறுமையை ஒழிப்பதற்காக பல்வேறு திட்டங்கள் நடைபெற்று வருகின்றது. இந்த கிராமத்தில் நல்ல வருவாய் உள்ளது. கடந்த நான்கரை ஆண்டுகளில் 8 கோடியே 61 லட்சத்தி 80,000 ரூபாய் செலவில் 167 பணிகள் நடைபெற்று வருகிறது இதில் பெரும்பாலான பணிகள் முடிவடைந்துள்ளது .மீதிபணிகள்விரைவில் மூடிவடையும். .மக்களின் தேவைகளை அரசு அதிகாரிகள் உணர்ந்து அதை நிறைவேற்றும் வகையில் செயல்பட வேண்டும் .மக்களின் தேவைகளை அறிந்து செயல்படும் முதல்வராக நமது முதல்வர் உள்ளார்கள் .

### வாக்காளர் பட்டியலை சரிபாருங்கள்!

நாம் செலுத்தும் வரி ஒன்றிய அரசிற்கும் தரப்படுகிறது. ஆனால் ஒன்றிய அரசு நமக்கு போதிய நிதியை தரப்படுவதில்லை. உரிய நிதியை ஒன்றிய அரசு வழங்கினால் கிராமங்கள் இன்னும் வளம் அடையும். கிராமங்கள் முன்னேற வேண்டும் என்ற வகையில் பல்வேறு திட்டங்களை முதல்வர் அவர்கள் செயல்படுத்திவருகிறார்கள் .வருகிற 4ம்தேதி முதல் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த முகாம் நடைபெற உள்ளது. அதற்கு பொதுமக்கள் தங்களது பெயர்கள் வாக் காளர் பட்டியலில் உள்ளதா என்று பார்த்து வாக்காளர் பட்டியலில் சேர்ந்திட வேண்டும் .இதில் ,PIA 2பாக முகவர்கள் முழுமையாக பங்கேற்க வேண்டும். இந்த திட்டம் முழு அளவில் நிறைவேற கிராம மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் . அப்பொழுதுதான் நமது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்று தெரிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் செல்வ சுரபி, வட்டாட்சியர் ராஜா, பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ் .ரவி, ஒன்றிய செயலாளர்கள் கே .எஸ். ஆனந்த் , விராமதி மாணிக்கம், மாவட்ட மகளிரணி தலைவர் திருமதி மணிமேகலை முத்துச்சாமி, நிர்வாகிகள் எஸ் .ஆர் .பி .ரமேஷ், பேரூர் கழக செயலாளர் அசோக் ,செட்டிநாடு பாலு, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்துகுமார், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி, வழக்கறிஞர் பாலசுப்பிரமணியன் , முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முருகப்பன், ஆணையாளர்கள் விஜயகுமார்,திருமதி குமுதம், உட்பட ஒன்றிய நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

# அரியலூர் நகராட்சி பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – சா.சி.சிவசங்கர் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

அரியலூர், நவ. 3- -

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சியில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையம் கட்டுமானப் பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க அரியலூர் நகராட்சி புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டது. அதன்படி புதிய பேருந்து நிலையம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் முதற்கட்டமாக உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி 2022-23 திட்டத்தின் கீழ் ரூ.7.80 கோடி மதிப்பீட்டில் 21 பேருந்து நிறுத்த தடங்கள், 30 கடைகள், நிர்வாக அறை, உணவகம், நேரக்கட்டுப்பாட்டு அறை, டிக்கெட் புக்கிங்க கவுண்டர், ஏ.டி.எம் அறை, போக்குவரத்து துறை அலுவலக அறை, எலக்ட்ரிக்கல் அறை, பாதுகாப்பு அறை கட்டுப்பாட்டு அறை, கழிவறை உள்ளிட்ட பணிகளும், இரண்டாம் கட்டமாக மூலதன மான்யநிதி 2023-24 திட்டத்தின் கீழ் ரூ.3.78 கோடி மதிப்பீட்டில் 6 பேருந்து நிறுத்த தடங்கள், 15 கடைகள், தாய்மார்கள் பாலூட்டும் அறை, நேரக்கட்டுப்பாட்டு அறை, காவல் கட்டுப்பாட்டு அறை, கழிவறைகள் உள்ளிட்ட கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்புதிய பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமான பணிகளை இன்றையதினம் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு பணிகளின் தற்போதைய நிலை குறித்தும், மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் விவரம் குறித்து ஆய்வு செய்ததுடன், எஞ்சியுள்ள பணிகளை விரைவாக முடித்திட சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், நகர்மன்ற துணை தலைவர் கலியமூர்த்தி, அரியலூர் நகராட்சி ஆணையர் அசோக்குமார், அரியலூர் நகராட்சி பொறியாளர் காசிநாதன், கழக சட்டத்திட்ட திருத்த குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், நகர கழக செயலாளர் இரா. முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, ஒன்றிய பொறுப்பாளர்கள் இரா.கென்னடி, தெய்வ. இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### உடுமலை நகராட்சியில்

# தூய்மைப் பணியாளர்களுக்கு நல வாரிய அடையாள அட்டைகள்!

## நலவாரியத் தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி வழங்கினார்!

கோவை, நவ. 3 -

உடுமலை நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான நலவாரிய அடையாள அட்டை மற்றும் நலத்திட்டங்கள் வழங்கும் விழா உடுமலை நகர செயலாளரும், Ex நகரமன்ற தலைவருமான வேலுச்சாமி தலைமையில் உடுமலை நகராட்சி ஆணையாளர் ஜெ. விநாயகம் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி கலந்து கொண்டு தூய்மை பணியாளர்களுக்கு நலவாரிய அடையாள அட்டை மற்றும் தூய்மை பணி மேற்பார்வையாளராக ஒருவருக்கு பணி நியமண ஆணை வழங்கியும், சிறப்புரையாற்றினார்.

பின்பு தூய்மை பணியாளர்களுடன் சமபந்தி விருந்தில் கலந்து கொண்டு உணவருந்தினார்..

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய துணை தலைவர் திருமதி.கனிமொழி பத்மநாபன் , நகர மன்ற துணை தலைவர் , மாவட்ட தாட்கோ மேலாளர் அர்ஜுனன், உடுமலை வட்டாச்சியர் கௌரிசங்கர், நகராட்சி சுகாதார ஆய்வாளர், நகர்நல அலுவலர், நகரமன்ற உறுப்பினர்கள் ஆசாத் , லோகு பாண்டியன், திருமதி. எஸ். மும்தாஜ், திருமதி. ஜெயலட்சுமி , திருமதி. தனலட்சுமி, திருமதி. ஷாஜாத்தி, திருமதி. ஜெயந்தி , திருமதி. கலைவாணி அரசு அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில்

# கிருஷ்ணகிரியில் திட்டப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம்!

## தே. மதியழகன் எம்.எல்.ஏ. – ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரி. நவ.3-

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் முன்னோடி திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர்மதியழகன்கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ், கம்யூனிஸ்ட் தளி சட்டமன்ற உறுப்பினர் ராமசந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வருவாய் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, பள்ளிக்கல்வித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, நீர்வளத் துறை, வேளாண் மற்றும் உழவர் நலத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உள்ளிட்ட அனைத்து துறைகள் சார்பாக பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளின் முன்னேற்றம் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி பொற்கால ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வருகை தந்து பல்வேறு முடிவுற்ற திட்ட பணிகளை துவக்கி வைத்தும், புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தமிழகத்திலேயே கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான பட்டாக்கள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். பொதுமக்களுக்கு பல ஆண்டுகளாக பட்டா வழங்காமல் இருந்த நிலையில் பயனாளிகள் பட்டா பெற்று பயனடைந்துள்ளார்கள்.

தற்போது வடக்கிழக்கு பருவமழை துவங்கியுள்ள நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நல்ல மழை பெய்துள்ளது. கடந்த ஆண்டு பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட போது அரசு துறை அலுவலர்கள் சிறப்பான முறையில் பணியாற்றி பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தனர். அதேப்போல கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாம் 228 முகாம்கள் நடைபெற்றுள்ளது. இம்முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச் சர் அவர்கள் அறிவுறுத்தி உள்ளார்கள். எனது துறை சார்ந்த அலுவலர்கள் தங்கள் துறைக்கு வரப்பெற்றுள்ள தகுதியான மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு பயன்கள் கிடைக்க மாவட்ட நிர்வாகம் உறுதியாக உள்ளது. கலைஞர் உரிமைதொகை கிடைக்க பெறாதவர்களுக்கு இம்முகாமில் மனுக்கள் பெறப்பட்டுள்ளது. தகுதிவாய்ந்த மகளிர்க்கு டிசம்பர் மாதம் வழங்கப்படும்.

மேலும் மாநிலம் முழுவதும் 2 இலட்சம் கலைஞர் கனவு இல்லம் கட்ட நடவடிக்கை மேற்கொண்டு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த வாரம் தென்காசி மாவட்டத்தில் 1 வது இலட்சத்து 1 வீட்டை திறந்து வைத்து பயனாளிக்கு வழங்கினார்கள். அதேப்போல் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பழுதுபார்ப்பு பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சாலை பணிகளுக்கு அரசுக்கு கருத்துரு அனுப்பபட்டு விரைவில் அப்பணிகள் மேற்கொள்ளப்படும். தாயுமானவர் திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்தோறுக்கு மாதம் முதல் வாரத்திலேயே அவர்களின் வீடுகளுக்கு உணவு பொருட்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. எனவே துறை சார்ந்த அலுவலர்கள் விட்டுப்போன பணிகள் மற்றும் வளர்ச்சி திட்ட பணிகளை கண்ணும் கருத்துமான மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர் அர.சக்கர பாணி தெரிவித்தார்.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், லத்தூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் எஸ்ஐஆர் வாக்காளர் சிறப்பு திருத்த அவசர செய்ய குழு கூட்டம் ஒன்றிய பொறுப்பாளர் கே.எஸ்.ஆர்.கார்த்திகேயன் கலந்து கொண்டு பேசினார் அருகில் பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, ராஜேந்திரன், ஏமநாதன், ரங்கநாதன், பாரதி பாபு, முல்லைவாணன், சுரேஷ், நிர்வாகிகள் வெங்கடேசன், சுந்தரவடிவழகன், உள்ளிட்ட பாகா முகவர்கள் மற்றும் பிஎல்எ 2 முகவர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் நவ. 8 வரை மழைக்கு வாய்ப்பு!

சென்னை,நவ.3–

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நவ. 8 வரை மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

மத்தியகிழக்கு மற்றும் அதனை ஒட்டிய வடகிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வடக்கு - வடகிழக்கு திசையில் நகர்ந்து, கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுகுறைந்துள்ளது. இது மேலும் வடக்கு- வடகிழக்கு திசையில் நகர்ந்து வலுவிழக்கக்கூடும்.

நவ. 8 வரை மழைக்கு வாய்ப்பு

கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்றும் நாளையும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவ. 4: வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நவ. 5 – 6: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நவ. 7: வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். நவ. 8: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.





இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வா.பெ.சுரேஷ் வட்ட செயலாளர் கௌரீஸ்வரன் முன்னிலையில் வார்டு 53 மண்டலம் 05 மாமன்ற உறுப்பினர் பா. வேளாங்கண்ணி தலைமையில் ஏரியா சபைக் கூட்டம் நடைபெற்றது. பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள், பெருநகர குடிநீர் வழங்கல் துறை அதிகாரி துப்புரவு மற்றும் சுகாதாரம் ஆய்வாளர் துறை சார்ந்தவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.